©
தமிழ்நாடு அரசு 2009

கையெழுத்துத் தொடர்

## நிதித் (படிகள்) துறை

### அரசாணை எண்.112, நாளது மார்ச் 21, 2009
### (பங்குனி 8, திருவள்ளுவர் ஆண்டு 2040)

**மதிப்பூதியம் / தொகுப்பூதியம்** – மதிப்பூதியம் / தொகுப்பூதியம் பெறும் பணியாளர்கள் – தனி உயர்வு – 1–1–2009 முதற் கொண்டு தனி உயர்வு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பின்வருவனவற்றைப் படிக்கவும்:–

1. அரசாணை நிலை எண்.492, நிதித் (படிகள்) துறை, நாள் 13.11.2008.
2. அரசாணை நிலை எண்.111, நிதித் (படிகள்) துறை, நாள் 21.03.2009.

*****

**<u>ஆணை:</u>**

பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையின்படி, பல்வேறு வகைப்பணியாளர்களுக்கு 1–7–2008 ஆம் நாள் முதல் மதிப்பூதியம் / தொகுப்பூதியத்தை தனிப்பட்ட வகையில் உயர்த்தி ஆணை பிறப்பித்தது.

**2.** மேலே பார்வை 2–ல் கண்டுள்ள அரசாணையில், முறையான திருத்த காலமுறை ஊதிய விகிதம்/வரையறுக்கப்படாத ஊதிய விகிதம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 1–1–2009–லிருந்து உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்தது. எனவே, மதிப்பூதியம் / தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு 1–1–1996 நாளுக்கு முன்னர் பெற்ற வீதத்தில் தொகையை உயர்த்தி வழங்குவதென அரசு தீர்மானித்தது. இதன்படி, மதிப்பூதியம் / தொகுப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 1–1–2009 ஆம் நாளிலிருந்து தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இதன் விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| 1–1–1996 ஆம் நாளுக்கு முன்னர் 150 ரூபாயும் அதற்கு மேலும் தொகை பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.20/- |
| 1–1–1996 ஆம் நாளுக்க்கு முன்னர் 150 ரூபாய்க்குக் குறைவான தொகை பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ.10/- |

த.பி.பா.

**3.** சனவரி மற்றும் பிப்ரவரி 2009 ஆம் மாதங்களுக்கான தனிப்பட்ட நிலுவைத் தொகை மார்ச் 2009 ஆம் மாத தொகுப்பூதியம்/ மதிப்பூதியம் பெற்ற பின்னரே வழங்கப்படவேண்டும்.

**4.** உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் பணியாற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கும் இந்த ஆணை பொருந்தும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு. ஞானதேசிகன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
கருவூலக் கணக்குகள் ஆணையாளர், சென்னை–15.
அனைத்து கருவூல அதிகாரிகள்.
ஆணையாளர், மாநகராட்சி, சென்னை/மதுரை/கோயம்புத்தூர்/திருச்சிராப்பள்ளி/சேலம்/திருநெல்வேலி/ஈரோடு/திருப்பூர்.
உள்ளாட்சி நிதிக் கணக்கு இயக்குநர், சென்னை–2.

<u>நகல் பெறுநர்</u>
சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9.
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும், சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

–/ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /-

21/03/09

பிரிவு அலுவலர்.